RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2037

OPEN ACCESS

# நாஞ்சில்நாடன் புதினங்களில் குடும்ப உறவுகள்

**பெ. செல்வராணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637002, தமிழ்நாடு, இந்தியா

# Family Relationships in Nanjil Nadan Novels

**P. Selvarani** [a, *]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts College, Namakkal-637002, Tamil Nadu, India

* Corresponding Author: selvaranisukesivan@gmail.com

Received: 26-06-2022
Revised: 27-09-2022
Accepted: 14-10-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

The world operates on the basis of people's likes and dislikes towards one another. This study shows that the greatness of family relations, which has been seen in Tamil literature since time immemorial, is reflected in contemporary works as well. It is because of the richness of relationships that achievements have taken place. The study highlights the mental struggle of family relationships, the maturity to give up their interests for others, and the self-search of young people who struggle with the confidence that they have to reach a higher position in society. In the novels, Thalaikil Vikithangal (Inverted Ratios), Chathuranga Kuthirai (Chess Horse), and Enpilathanai Veyil Kaayum (sun's fierce ray dries up), the youth's ability to strive to uplift the family is highlighted. This study suggests that it is also necessary to maintain relationships in the struggle for life and in the pursuit of knowledge.

**Keywords:** Nanjil Nadan, Chathuranga Kuthirai, Veyil Kaayum, Vikithangal

## முன்னுரை

இலக்கியப் படைப்புகளே மனித வாழ்வினை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக மிளிர்கின்றன. புலம் பெயர்ந்து அலைந்து திரிந்து ஆதிமனிதன் படிப்படியாய் முன்னேறி நாகரிக நிலையை அடைந்தான். பிறகு தனக்கென தொழில், பண்பாடு, பழக்க வழக்கம், ஒழுக்க முறைகள், அறநெறிகள் மற்றும் வாழ்வியல் கோட்பாடுகள் ஆகியவற்றை வகுத்துக்கொண்டான். மனிதர்கள் ஒருவர் ஒருவரை சார்ந்தே வாழமுடியும் என உணர்ந்ததன் விளைவாகக் குடும்ப உறவுகளை உருவாக்கினான். குடும்பங்கள் இணைந்து சமூகத்தின் அங்கமாக உருமாறின. மனிதன் ஒரு சமூக பிராணி என்றார் தத்துவஞானி அரிஸ்டாட்டில். தாம் உருவாக்கிய சமூகத்தில் தலைசிறந்து விளங்க பல்வேறு வாழ்வியல் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு வாழ்வில் உன்னத நிலையினை அடைய முற்படுகிறான் மனிதன். இங்கு நாஞ்சில்நாடன் புதினங்கள் குடும்பத்தில் மனிதர்களிடையே நிலவும் அன்பு அடிப்படையலான நிகழ்வுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## குடும்பம்

மனித சமூகத்தின் அடிப்படையான அலகு குடும்பம் ஆகும். குடும்ப அமைப்பு நல்ல முறையில் அமைந்தால் அது நல்ல குடும்பம் எனப்படும். குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது.

“இடும்பைக்கே கொள்கைக் கொல்லோ குடும்பத்தைக் குற்றம் மறைப்பதால்

உடம்பு”

இதற்கு பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்த கூட்டம் என்ற பொருள் தருகிறது (Devanayapavanar, 2007). இத்தகைய குடும்பத்தில் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதல், அன்பு வைத்தல், விட்டுக்கொடுத்தல், பெரியோரை மதித்தல் போன்ற உணர்வுபூர்வமான செயல்களே மனித மனங்களை ஒன்றிணைக்கின்றன.

## குடும்பத்தில் அன்புநிலை

குடும்ப உறவுமுறைகளில் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், பாட்டன் - பாட்டி, பெயரன் - பெயர்த்தி போன்ற நிலைகளில் அன்பு, பாசம், நேசம் என்பன காட்சிக்கு உட்படா உணர்வுக் கயிறாக நம்மிடையே பிணைந்து காணப்படுகிறது.

## சிவதாணு

தலைகீழ் விகிதங்கள் என்னும் நாவலில் பட்டதாரியான சிவதாணு, வீட்டோடு மாப்பிள்ளையாகி, பல்வேறு துன்பங்களை சகித்துக் கொண்டும் அவமானங்களைத் தாங்கிக் கொண்டும் வாழ்கின்றான். மாமியார், மாமனாரின் ஏளனப் பேச்சுகளைப் பொறுத்துக் கொண்டதோடு தனது சுயத்தை நிரூபிக்கக் குடும்பத்திலிருந்து பிரிந்துச் சென்று, வேலையில் சேர்ந்து அதில் உயர்ந்த நிலையை அடைந்தப் பிறகு, நீண்ட போராட்டத்திற்குப் பின்னரே தனது குடும்பத்துடன் இணைகிறான். சிவதாணு தனது மனைவி மற்றும் மகளின் மீது வைத்திருக்கும் அன்பே இதற்குக் காரணம்.

சிவதாணுவின் தாய் தனது மகனின் படிப்பிற்காக விதைநெல்லை விற்றதும், அவனது நல்வாழ்விற்காக வீட்டோடு மாப்பிள்ளையாக்க சம்மதித்ததும் தாயின் அதீத அன்பின் வெளிப்பாடே என்பதனை நன்றாக உணர முடிகிறது.

## கந்தையா

மாமிசப்படைப்பு - நாவலில் கந்தையாவுக்கு நான்கு மக்கள். மூன்று பிள்ளைகள் இறந்தே பிறந்ததால் பின்னால் பிறந்த இந்த பிள்ளைகளின் மீது கந்தையாவுக்கு அடங்காத பாசம்.

“மக்கா, மக்கா”

என்று கொண்டு திரிவான் (Nanjil Nadan, 2008). வெளியே எங்கு வேலைக்கு போய்விட்டு வந்தாலும் மடியில் ஒரு பொட்டலம் கட்டாயம் இருக்கும். கூலி வேலை கிடைக்காத நாட்களிலும், சாதாரண நாட்களிலும் கூட குளித்து, திருநீறு பூசி முடித்ததும், முதல் சொல்லாய் கந்தையா வாயிலிருந்து புறப்படுவது

“மக்களே சாப்பிட வாருங்களே”

என்பது தான். இப்படிப்பட்ட பாசத்தினால் அவர்களை பட்டினி இல்லாமல் பார்த்திட பெரும்பாடு பட்டான் கந்தையா (Nanjil Nadan, 2010).

“பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற”

என்னும் குறட்பாவின் கருத்து இங்கு பொறுந்தத்தக்கது (Devanayapavanar, 2007).

"குடும்பத்திற்காக விட்டுக் கொடுக்கும் பண்பு

விட்டுக்கொடுப்போர் கெட்டுப்போவதில்லை"

என்னும் உயர்ந்த சிந்தனையானது குடும்ப உறவின் சங்கிலியும் நட்பு வட்டாரம் பிணைப்பும் விட்டுக்கொடுக்கும் வேள்வியாலே தழைத்தோங்குகிறது என்பதை உணர்த்துகிறது.

தலைகீழ் விகிதங்கள் சிவதாணு தன்னை மாப்பிள்ளை பார்க்க வந்தபோது,

"மாட்டுச் சந்தையில் மாடுபார்க்க வந்ததுபோல்"

உணர்ந்து மன வேதனை அடைந்தாலும் தனது குடும்ப நலனுக்காக தனது விருப்பங்களையும் சுயமரியாதையையும் விட்டுக்கொடுத்து வீட்டோடு மாப்பிள்ளையாகச் சம்மதிக்கின்றான் (Nanjil Nadan, 2010).

## சகிப்புத் தன்மை

என்பிலதனை வெயில் காயும் - நாவலில் சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்த சுடலையாண்டி, வயதான பாட்டன் பாட்டியின் ஆதரவில் வாழ்கிறான். ஒரு வேளை உணவு மட்டுமே சில நாட்கள் அவனுக்குக் கிடைக்கும். தாத்தாவின் தள்ளாத வயதிலும் அவரின் உழைக்கும் திறத்தையும் மன உறுதியையும் காணும் சுடலையாண்டிக்கு தானும் படித்து முடித்தப் பிறகு நல்ல வேலைக்குச் சென்று விட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. மேலும் தாத்தாவிற்கு வேலை கிடைக்காத நாட்களில் தான் ஏதேனும் கூலி வேலைக்குச் செல்லவும் முற்படுவான். தாத்தா அதனை அனுமதிக்கமாட்டார்.

"ஒரு வேளை உணவுடன் கல்லூரிக்கு செல்லும் நாட்களில் குழாய்த் தண்ணீரையே மதிய உணவாக்கிக்கொள்வான் சுடலையாண்டி" (Nanjil Nadan, 2007).

ஒரு வேட்டி சட்டையையே தினமும் துவைத்து அணிந்து கொண்டுச் செல்வான். சகவயது இளைஞர்களின் ஆசைகள் ஏதுமின்றி தனது நிலையை உணர்ந்து சகிப்புத்தன்மையுடன் வாழும் சுடலையாண்டி ஒரு சிறந்த பேரனாக தாத்தா, பாட்டிக்கு அமைகிறான்.

## குடும்பப் பொறுப்பு

மாமிசப்படைப்பு நாயகன் கந்தையா மேலதிகாரப் போக்கினை கண்டிக்கும் மனப்பாங்குடன் சித்தரிக்கப்பட்டாலும் குடும்பத்தில் தனது பிள்ளைகளின் மீது அளவற்ற பாசம் வைத்திருப்பவனாக உள்ளான். பிள்ளைகளை பசியின்றி காக்க பெரும்பாடுபட்டான்.

சதுரங்க குதிரை நாவலில் நாராயணன் தன் படிப்புச் செலவுக்காக தனது அம்மா, மாமாவிடம் வாங்கிய கடனையும்.

"தாய் இறந்தபோது ஆன செலவையும் சில ஆண்டுகளாக நகரத்தில் சம்பாதித்து அடைக்க முற்படுகிறான்" (Nanjil Nadan, 2005).

சொந்தமாக உள்ள நிலம், வீட்டையும் தனது மாமாவின் கவனிப்பில் விட்டு விடுகிறான். எட்டுத்திக்கும் மதயானை நாவலில் பூலிங்கம் ஊரைவிட்டுச் சென்று பல இடங்களில் வேலைக்காக சிரமப்பட்டு, படிப்படியாய் முன்னேறிய பிறகு தனது வீட்டிற்குப் பணம் அனுப்புகிறான்.

"தாய் தன் மகன் அனுப்பிய ரூபாய் நோட்டை மகனையே தடவுவது போல் ஓராயிரம் முறை தடவிப் பார்க்கிறாள்" (Nanjil Nadan, 2015).

மண்பிசைந்து குயவர் தொழில் செய்யும் தனது பெற்றோரை நினைத்து மிகவும் வருந்துகிறான் பூலிங்கம். என்பிலதனை வெயில் காயும் நாவலில் சுடலையாண்டி தனது கல்லூரிப் படிப்பு முடிந்ததும் பலவிதமாக வேலைக்கு முயற்சித்துத் தோற்கிறான். இறுதியில் தனது தாத்தாவின் கிழங்கு எடுக்கும் வேலையைச் செய்ய முற்படுகிறான். மலைப்பகுதியிலிருந்து, வெயில், மழையில் செய்யும் இந்த வேலையின் போது தாத்தாவின் கஷ்டத்தை உணர்கிறான். குடும்பத்திற்காக தாத்தாவின் தியாகத்தைப்

பேரன் மதிக்கின்றான். பேரனின் கனவுக்காக தாத்தா முயற்சித்து இறுதியில் அவனது தாய் வழி உறவினரிடம் அவனை அனுப்புகிறார்.

மேற்கண்ட நிகழ்வு

“தந்தை மகன்காற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்”

என்னும் திருவள்ளுவரின் வாய்மொழிக்குச் சான்றாக உள்ளது (Devanayapavanar, 2007).

## உறவைக் காக்கும் தன்மை

தலைகீழ் விகிதங்கள் நாவலில் சிவதாணுவின் தந்தை மகனின் அப்பிளிகேஷன் செலவுக்காக மற்றும் வேலை தேடும் செலவுக்காக,

“வயலறுக்கட்டும் … நாலு கோட்டை நெல்லை வித்துண்ணாலும் அப்ளிகேஷன் அனுப்பிப்போட வேண்டியதுதான்” என்று பெரியவரிடம் கூறுகிறார் (Nanjil Nadan, 2009). தன் மகன் மீது வெளிப்படையாக வெறுப்பை உமிழ்கின்ற அப்பா உள்ளுக்குள் வைத்திருக்கும் அன்பை இத்தருணத்தில் உணர்கிறான் சிவதாணு.

## முடிவுரை

நாஞ்சில் நாடன் நாவல்களில் தந்தை - மகன், தாய் - மகன், கணவன் - மனைவி, பாட்டன் - பெயரன் போன்றோரின் உறவுகள் மிகவும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. குடும்பத்தின் ஒற்றுமைக்காக, குடும்ப நபர்களின் நன்மைக்காக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும், அன்பு பாராட்டியும், குடும்பப் பொறுப்புகளைச் சுமந்தும், தனது உறவுகளைக் காப்பாற்றும் விதமாக ஆசிரியரின் படைப்புகள் அமைந்துள்ளன. இவரின் நாவல்கள் நமது இந்திய நாட்டின் பாரம்பரிய மதிப்புகளை மெருகேற்றியுள்ளன என்று எடுத்தியம்பலாம். மிகச் சிறந்த குடும்பங்கள் சிறந்த சமூகத்தின் ஆணிவேராக அமைகின்றன. குடும்பத்தில் தனி மனிதன் கொள்ளும் அன்புமிக்க உறவுகளாலே இச்சமூகம் பிணையப்பட்டிருக்கிறது. குடும்பம் தான் சமூகத்தின், நாட்டின் மற்றும் உலகின் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. எனவே நாம் ஒவ்வொருவரும் தன்னுடைய உறவுகளைக் காத்து உன்னதமான நிலையை அடைய வேண்டும். அப்பொழுதுதான் வீடும் செழிப்படையும் நாடும் வளர்ச்சி அடையும்.

## References

Devanayapavanar, (2007) Thirukkural, Poombukar publication, Chennai, India.

Nanjil Nadan, (2005) Sathuranga Kuthirai, Vijaya Pathippagam, Coimbatore, India.

Nanjil Nadan, (2007) Enbilathanai Veyil Kayum, Vijaya Pathippagam, Coimbatore, India.

Nanjil Nadan, (2008) Mithavai, Vijaya Pathippagam, Coimbatore, India.

Nanjil Nadan, (2009) Thalaikeezh Vikithankal, Vijaya Pathippagam, Coimbatore, India.

Nanjil Nadan, (2010) Mamisap Padaippu, Vijaya Pathippagam, Coimbatore, India.

Nanjil Nadan, (2015) Ettuthikkum Madhayaanai, Vijaya Pathippagam, Coimbatore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License